# இந்திய வானொலி நிருபரை வெளியேற பணிப்பு!

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஐப்பசி 1 இதழ்: 249
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 18-10-1991

## திங்கள் வரை காலக்கெடு

[கொழும்பு]
இந்திய வானொலி நிருபர் திரு. ஏ. கருப்பசாமியை நாட்டைவிட்டு வெளியேறுமாறு இலங்கை அரசு உத்தர விட்டுள்ளது. திங்கட்கிழமை வரை இவருக்குக் காலக்கெடு வழங்கப்பட்டுள்ளது. சபாநாயகர் முகமது ராஜி

(4-ம் பக்கம் பார்க்க)

## கடும் எதிர் நடவடிக்கை இந்தியா எச்சரிக்கை

[புதுடில்லி]
இந்திய வானொலி 'தூரதர் ஷன்' நிருபர் ஏ. கருப்பசாமியின் வெளியேற்ற உத்தரவிற்கு கடும் எதிர் நடவடிக்கை மேற் கொள்ளப்போவதாக இந்தியா எச்சரித்துள்ளது. திரு. கருப்பசாமியின் தலைநகருக்கு இந்திய தூதர் திரு. ஜா

(4ம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம்

[கொழும்பு]
யாழ். மாவட்டத்தில் இன்று காலை 5 மணிமுதல் மறு அறிவித்தல்வரை ஊரடங்குச்சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ள

(4-ம் பக்கம் பார்க்க)

★ வடமராட்சிப் பகுதியில்

# இராணுவ தாக்குதல் ஆரம்பம்

# இரு பொம்மர்கள் குண்டு வீச்சு

## லட்சக்கணக்கான மக்கள் வெளியேற்றம்

[நமது நிருபர்கள் எஸ். சுந்தரலிங்கம், மு. ஈழத்தமிழ்மணி]

வடமராட்சிப் பகுதியில் அரச படையினரின் இராணுவ முஸ்தீபு நடவடிக்கைகளையடுத்து லட்சக்கணக்கான மக்கள் அங்கிருந்து இடம் பெயர்ந்துள்ளனர். நேற்று இரு பொம்மர் விமானங்கள் இப்பகுதியில பலதடவைகள் குண்டுகளை வீசியுள்ளன.

நேற்று முன்தினம் இப்பகுதியிலிருந்து வெளியேறுமாறு அரசு விடுத்த எச்சரிக்கையை அடுத்து வடமராட்சியிலுள்ள மக்கள் வெளியேறினர்கள். குழந்தைகள், பெண்கள், வயோதிபர்கள் உட்பட லட்சக்கணக்கான மக்கள் தமது கையில் கிடைத்த பொருள்களுடன் கால் நடையாகவும் சைக்கிள் மற்றும் வாகனங்களிலும் வெளியேறினர்கள்.

தென்மராட்சி, வலிகாமம் யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில் உள்ள உறவினர், நண்பர்களின் வீடுகளிலும் ஆலயங்கள் பாடசாலைகள் மற்றும் பொது இடங்களிலும் இடம் பெயர்ந்தவர்களில் பலர் தங்கி

(4ம் பக்கம் பார்க்க)

## மணலாறு மோதல் 12 புலிகள் வீரமரணம்

(யாழ்ப்பாணம்)
மணலாறு மாவட்டத்தில் நேற்று முன்தினம் இராணுவத்துடன் நடைபெற்ற நேரடி மோதலில் 12 வீரவேங்கை

(4-ம் பக்கம் பார்க்க)

## தொண்டா யோசனைக்கு தமிழ் கட்சிகள் ஆதரவு

(கொழும்பு)
அமைச்சர் திரு. தொண்டமான் இனப்பிரச்சனை

(4-ம் பக்கம் பார்க்க)

## மாதகல் கடலில் 8 மீனவர் கைது

(பண்டத்தரிப்பு)
சேந்தாங்குளம்- மாதகல் கடல் பகுதியில் நேற்று நண்பகல் கட்டுமரமொன்றில் மீன் பிடித்துக் கொண்டிருந்த எட்டு கடற்றொழிலாளர்களை கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம்செய்து சுற்றிவளைத்து கைதுசெய்து கப்பலில் ஏற்றிக் கொண்டு சென்றனர். பின் இவர்கள் அனைவரும் தாக்கப்பட்டு கடலில் தூக்கி வீசப்பட்டனராம். வீசப்பட்டவர்களில் ஒருவர் படுகாயமடைந்ததுடன் அனைவரும்

(4ம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் கடும் மோதல் 30 படையினர் உயிரிழப்பு

(கொழும்பு)
முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த செவ்வாய், புதன் கிழமைகளில் இடம்பெற்ற கடும் மோதலில் 30 படையினர் கொல்லப்பட்டதுடன் 75 படையினர் படுகாயமடைந்துள்ளனர்.

பெருமளவு ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

மேற்படி இரு தினங்களிலும் கொக்குத்தொடுவாய் பகுதியிலேயே கடும் மோதல் இடம் பெற்றுள்ளதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்

(4ம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் ஜோன் அமரதுங்க யாழ்ப்பாணம் திடீர் விஜயம்

(கொழும்பு)
யாழ் குடா நாட்டு பாதுகாப்பு நிலைமைகளை நேரில் விஜயம் செய்து பார்வையிட்ட பதில் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு. ஜோன் அமரதுங்க ஜனாதிபதியிடம் முழு விபரங்களையும் நேற்று மாலை தெரிவித்தார்.

நேற்று மாலை பாதுகாப்பு ராஜாங்க அமைச்சின் செயலர் ஏயார் வைஸ் மார்ஷல் வால்டர் பெர்னாண்டோவுடன் பலாலி வந்த அமைச்சர் திரு. அமரதுங்க காரைநகர், நயினாதீவு

(4-ம் பக்கம் பார்க்க)

## நிவாரணம் வழங்குமாறு அவசர கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டத்தில் தற்போது பெருமளவு மக்கள் அகதிகளாகியிட்டார்கள். அவர்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்குவதற்கு ஆவன செய்யும்படி, கொழும்பிலுள்ள புனர்வாழ்வு செயலருக்கு அவசர வேண்டுகோள் ஒன்றை யாழ் அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் நேற்று விடுத்துள்ளார்.

யாழ். நகரிலுள்ள சர்வதேச

(4ம் பக்கம் பார்க்க)

## மட்டு - ஆனையிறவில் 4 படையினர் பலி

[மட்டக்களப்பு]
மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப்புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் இரு படையினர் கொல்லப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் மட்டு. மாவட்டத்திலுள்ள சிங்கபுர முகாமிலிருந்து ஜீப் வண்டிகளில் ரோந்து வந்த படையினர் மீ புலிகள் தாக்குதல் நடத்தினர்கள்

இத்தாக்குதலில் இரு படையினர் உயிரிழந்ததுடன் இராணுவ உபகரணங்களும் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன.

[3-ம் பக்கம் பார்க்க]

## லலித், காமினி கூட்டங்களுக்கு ஐ.தே. கவினர் செல்லத் தடை

[கொழும்பு]
ஐ. தே. கட்சி அதிருப்தியாளர்களான லலித் அத்துலத் முதலி, காமினி திசநாயக்கா ஆகியோரின் அரசியல் கூட்டங்களில் ஐ. தே. கட்சி உறுப்பினர்கள் கலந்து கொள்ள ஐ. தே. கட்சியின்

(4-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## யாருடையது

வண்ணை சிவன்கோவில் சுற்றுடலிலுள்ள வீதியில் 1 சட்டைத்துணி கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளவும். தொடர்பு: "சபா ஸ்ரோர்ஸ்" சிவன் வடக்கு வீதி, யாழ்ப்பாணம்.

(சி-5505)

## A/L இரசாயனம்

A/L 93 இரசாயனம் சனி, ஞாயிறு வகுப்புக்கள் ஆரம்பம் 19 சனி மாலை 6-30மணி, மாலை வகுப்பு 3 மணி; கிழமை நாள் வகுப்பு ஆரம்பம் 21 திங்கள் மாலை 4-30மணி, திங்கள், புதன் மாலை 4-30 மணி. ஆசிரியர் சத்திஸ், 108, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-5494)

## NEW MASTER INSTITUTE JAFFNA.

### 93 A/L

★ (விஞ்ஞான பாடங்கள் மட்டும்)

ஆரம்பம்:
**19-10-1991**
(சனி காலை 7 மணி)

★ எமது வழமையான ஆசிரியர் குழுவினர்

★ தாமதிக்காது உங்கள் இடத்தை உறுதி செய்து கொள்ளவும்.

(ஏ-1641)

## ஆண்டு 4, 5

ஆண்டு 4திற்கான புலமைப் பரிசில் வினாத்தாள் 20-10-91 ஞாயிறு வெளியிடப்படும். ஆண்டு 5 பாடசாலை அனுமதி, புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள்களைப் பெற்றுக்கொள்ளலாம். ஆண்டு 4 முதல் ஆண்டு 8 வரை சகல பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன. 219. நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-5489)

## பாதிக்கப்பட்ட ஊழியருக்கு வேலைவாய்ப்பு

(ஊர்காவற்றுறை)

வடமாகாண கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தால் ஆனைக்கோட்டை - நாவாந்துறை ஆகிய இடங்களில் பலசரக்குக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன.

சமாசத்தால் இயங்கி வந்த பனிக்கட்டி ஆலை, மீன் தூள் ஆலை ஆகியன அண்மையில் விமான, ஷெல் தாக்குதலினால் பலத்த சேதமடைந்துள்ளதால் வேலை இழந்த சமாச ஊழியர்களுக்கு இந்தக் கடைகளில் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

[56]

## வழிப்பறிக் கொள்ளை

(ஊர்காவற்றுறை)

வட்டுக்கோட்டை - அராலி ஆகிய இடங்களுக்கு மாலை 6 மணிக்குப்பின் செல்பவர்களிடம் சைக்கிள், பணம் ஆகியவைகளைப் பறிக்கும் வழிப்பறிக் கோஷ்டியொன்று நடமாடுவதாக கூறப்படுகிறது. அராலி வெளியில் இச்சம்பவம் நடப்பதாகவும் அங்கிருந்து யாழ்ப்பாணம் வருபவர்கள் தெரிவிக்கின்றனர். இதுபற்றி விழிப்புக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

(59)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்**

## வடமாகாண இணைக்கப்பட்ட பல்கலைக்கழகக் கல்லூரி வவுனியா

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் சார்பில் விண்ணப்பங்கள் 1991 ஒக்ரோபர் 31-ஆம் தேதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

கணித - விஞ்ஞான Mathematical Science) பல்கலைக்கழகக் கல்லூரி விரிவுரையாளர்/பல்கலைக் கழகக் கல்லூரி விரிவுரையாளர் (தகுதிகாண்).

தகைமைகள்:

(1) கணிதம் அல்லது புள்ளி விபரவியல் சிறப்புப்பட்டத்தில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு

அல்லது

(2) கணிதம் அல்லது புள்ளி விபரவியல் பாடங்களிலொன்றுடன் பொதுப்பட்டத்தில் சிறப்புச் சித்தி

அல்லது

(3) உயர் கல்வி நிறுவனத்தின் சிபார்சின் படி பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் ஏற்றுக் கொள்ளக் கூடிய இதர தகைமைகள்;

சம்பள அளவுத்திட்டம்

பல்கலைக்கழகக் கல்லூரி விரிவுரையாளர் (தகுதிகாண்)
ரூபா 3900-08x100-4500 (மாதமொன்றுக்கு)

பல்கலைக்கழகக் கல்லூரி விரிவுரையாளர்
ரூபா 4500-16x200-7700 (மாதமொன்றுக்கு)

மேற்குறித்த தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்பின் தகைமையையும் பல்கலைக்கழகத்தில் அல்லது அதையொத்த நிறுவனத்தில் கற்பித்தல்/ஆராய்ச்சியில் மூன்றாண்டு அனுபவத்தையும் பெற்றுள்ள அபேட்சகர்கள் பல்கலைக் கழகக் கல்லூரி விரிவுரையாளர் பதவிக்கு நியமிக்கப்படுவர்.

விண்ணப்பதாரிகள் தமது முழுப்பெயர், முகவரி, பிறந்ததேதி, வயது, கல்வித் தகைமைகள், அனுபவம், இதர விபரங்கள், தங்களைப் பற்றி விசாரிக்கக்கூடிய இருவரின் பெயர்கள், விலாசங்களை உள்ளடக்கிய விண்ணப்பங்களைப் பல்கலைக் கழகப் பதிவாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

இதர பல்கலைக்கழகங்கள், பல்கலைக்கழகக்கல்லூரிகள், அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் அந் நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

பதிவாளர்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1991-10-16.

(ஏ-1665)

## DR. ARUNASALAM SIVAPATHASUNDARAM MEMORIAL LECTURE

The Faculty Board of the Faculty of Medicine, University of Jaffna has decided to invite applications to deliver a Lecture in memory of Dr. Arunasalam Sivapathasundarm, Consultant Paediatrician, General Hospital, Jaffna (Teaching), who was shot by the indian Peace Keeping Force on 22-10-1987 while on duty.

The Lecture shall be based on the profound study of topics related to Medicine and of interest to the Medical Students and Practitioners of Medicine.

The Lecture shall be delivered on 29th of November, 1991 at 3-30 p. m. in Kailasapathy Auditorium, University of Jaffna

The Abstract should be sent to the Dean, Faculty of Medicine, University of Jaffna on or before 8th of November, 1991.

The selected applicant shall submit the lecture on or before 15th of November 1991.

Prof. K. BALASUBRAMANIAM,
Dean/Faculty of Medicine.

Dean's Office,
Faculty of Medicine.
10 October 1991.

(A-1663)

## "எதிர்காலத்தின் வளர்ச்சியும், வீழ்ச்சியும் ஆசிரியர் கையில் தங்கியுள்ளது"

(அச்சுவேலி)

எதிர்காலச் சந்ததியின் தேவையையும் சமுதாயத்தின் வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு ஆசிரியர்கள் தமது கடமையை பொருத்தமான முறையில் நிறைவேற்றி எதிர்காலச் சமுதாயத்தை கட்டியெழுப்ப வேண்டும்.

யாழ். மாவட்ட கல்வித் திணைக்கள கல்வி அதிகாரி திரு. இ. சிவானந்தன் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரியில் செயற்படும் தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி நிலையத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டியின் போது கூறினார்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை மைதானத்தில் நடைபெற்ற போட்டிகளில் சிறப்புவிருந்தினராக கலந்துகொண்ட திரு. இ. சிவானந்தன் தொடர்ந்து கூறியதாவது:-

ஆசிரியர்களின் கையில்தான் எதிர்காலத்தின் வளர்ச்சியும் வீழ்ச்சியும் தங்கியுள்ளது. இதனைக் கருத்தில்கொண்டு ஆசிரியர்கள் தமது கடமையை காலத்துக்கு ஏற்புடையவிதத்தில் சிறப்பாக மேற்கொள்ள வேண்டும்.

வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களை கல்வி அதிகாரி திரு. எஸ். வீரபத்திரன், கல்வி அதிகாரி திரு. இ. சிவானந்தன் இருவரும் வழங்கினர்.

## பதில் உதவி அரச அதிபர்

(கொழும்புத்துறை)

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் திரு. கெர்ர் யோசப் இம்மாதம் 1ம் திகதி தொடக்கம் யாழ் பதில் உதவி அரசாங்க அதிபராக கடமையாற்றி வருகின்றார்.

(154)

## ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

கொய்யாத்தோட்டம் சனசமூக நிலையத்தின் 21-வது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமையும்; அரியாலை சனசமூகநிலையத்தின் 42-வது ஆண்டு நிறைவு விழா நாளை சனிக்கிழமையும் நடைபெறவுள்ளது.

(வி)

## ராசி பலன்

17-10-1991
வியாழக்கிழமை
(தமிழுக்கு ஐப்பசி 01)

தசமி பி. ப 3-18 வரை. அவிட்டம் பி. இ 3-30வரை மரணயோகம், இராகுகாலம் காலை 10-32 முதல் 12 வரை. சுபநேரம் காலை 6-02 முதல் 7-32 வரை.

மேடம்: வெளியார் உபதேசம், காரிய வெற்றி, தொழில் சிறப்பு.

இடபம்: வேலைப்பளு, அதிகாரிகள் உதவி, வைராக்கியம்

மிதுனம்: தடுமாற்றம், நண்பர் பகை, பணமுடை.

கடகம்: தொழிற்கேடு, அவசரபயணம், நோய் உபாதை

சிங்கம்: மனமகிழ்ச்சி, சுபகாரிய செலவு, வாக்கு வசிகரம்.

கன்னி: வெளியூர் செய்தி, குடும்பமகிழ்ச்சி, புதியஉறவு.

துலாம்: கன்னியர்க்குறைவு, புத்திரர் கவலை, தொல்லை.

விருச்சிகம்: வீண் விவாதம், தொழில் தகராறு, அலைச்சல்.

தனுசு: முதியோர் உதவி, குடும்பசுகம், புதிய சிந்தனை.

மகரம்: இனசன தொல்லை, தனிமைப்படல், அச்ச உணர்வு.

கும்பம்: எதிர்பாராத உதவி, பணம் கைகூடல், மகிழ்ச்சி.

மீனம்: பணமுடக்கம், வாக்குப் பகை, இடமாற்றம்.

ஜோஸ்யர்

## திலீபன் இல்லம் முதலிடம்

(அச்சுவேலி)

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரியில் செயற்படும் தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி நிலையத்தின் இல்ல விளையாட்டுப் போட்டியில் தியாகி திலீபன் இல்லம் முதலாம் இடத்தைப் பெற்றது.

இரண்டாம் இடத்தை மேஜர் முரளி இல்லமும் மூன்றும் இடத்தை கப்டன் மில்லர் இல்லமும் பெற்றுக்கொண்டன.

(74)

## கலை நிகழ்ச்சி

(மானிப்பாய்)

உரும்பிராய் சுதேசிய கலாமன்றத்தினர் நாளை 19ந்திகதி சனிக்கிழமை இராமநாதன் கல்லூரியில் கலைநிகழ்ச்சிகள் நடாத்தவுள்ளனர்.

## இடமாற்றம்

(ஊர்காவற்றுறை)

குறிகாட்டுவான் - புங்குடுதீவு 12 - ம் வட்டாரம் இறுப்பிட்டி ஆகிய பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து வந்த அகதிகளை யாழ். ரயில் நிலைய மண்டபத்தில் இடநெருக்கடி இருந்த காரணத்தால் யாழ் அடைக்கல மாதா ஆலயத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

[59]

## மக்கள் அஞ்சலி

(பண்டத்தரிப்பு)

மணலாறு மோதலின்போது காயப்பட்டு வீரமரணமடைந்த சூசி (மார்க்கண்டு தேவராஜா கன்னியா திருகோணமலை) என்ற வேங்கையின் புகழுடல் பண்டத்தரிப்பு ஜனிந்தாரோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. பெருந்தொகையான மக்கள் வந்து தங்கள் இறுதி அஞ்சலியை செலுத்தினார்கள். இரங்கலுரைகளும் நிகழ்த்தப்பட்டன.

(72)

## காணவில்லை

சுதுமலை தெற்கு வேலசாமி கோவிலடியில் வசிக்கும் சண்முகம் சிதம்பரம் சிங்கராசா என்பவரின் தாய்

சின்னத்தம்பி பெண்ணு

என்பவர் 15-10-1991 தொடக்கம் காணவில்லை காணுபவர்கள் இதே விலாசத்தின்படி ஒப்படைக்கவும். அவரின் வயது 70, அவர் நிறம் கறுப்பு வலது கண்பார்வை குறைந்தவர், அவரின் உயரம் 5½ அடி. அவர் போகும் போது அணிந்திருந்த உடையும் நகையும். உடை சிகப்புச் சேலையும் பூச்சட்டையும், நகை: தோடு, மோதிரம், மின்னி என்பன. அவரைக்கண்டு பிடித்து ஒப்படைப்பவர்களுக்குச் சன்மானம் வழங்கப்படும்.

தேடுபவர்கள்: சின்னமணி கலா.

(சி-5506)

# இயற்கையான பீடை நாசினிகள்

இன்றைய சூழ்நிலையில் பீடை நாசினிகள் பயன்படுத்துவதில் பல கஷ்டங்கள் காணப்படுகின்றன. அதாவது போக்குவரத்து சீரற்ற சூழ்நிலை இன்று நிலவுவதினால் போதிய அளவு நாசினிகளை தேவையான நேரத்தில் பெற முடியாமை, கிடைக்கும் நாசினிகள் பற்றிய போதிய அறிவு விவசாயிகளுக்கு இல்லாமை, மிகையான நாசினிகளைப் பயன்படுத்துவதினால் அவை தாவரப் பகுதிகளில் சேமிக்கப்பட்டு பின் மனிதனின் உடலைச் சென்றடைந்து நோயை ஏற்படுத்தல், சூழலை மாசுபடுத்தல், விவசாயிகளுக்கு நன்மை செய்யும் பிராணிகளும் அழிக்கப்படல் அத்துடன் அவை ஒரு கொல்லியாகவும் காணப்படுகின்றது.

எனவே இப்பிரச்சினைகளை நாம் வெற்றிகரமாகவும் முன்னேற்றமாகவும் தகர்த்து பீடைகளையும் கிருமிகளையும் அழிப்பதற்கு இலகுவானதும் மலிவானதும் தற்காலச் சூழ்நிலைக்கு ஏற்றதாகவும் காணப்படுவது இயற்கையான பொருட்களைப் பயன்படுத்தலே ஆகும்.

இந்த வகையில் வேம்பு, மரமுந்திரிகை, புகையிலை, துளசி, மரச்சாம்பல் போன்ற வற்றைப் பயன்படுத்தலாம். இவற்றை தனித்தனியே எடுத்து நோக்குவோம்.

**வேம்பு**

வேப்பமிலையை நிலத்துக்கு இடுவதால் விலங்குப் புழுவைக் கட்டுப்படுத்தலாம். வேப்பம் எண்ணெயைத் தெளிப்பதன் மூலம் நெல்லைத் தாக்கும் கபிலத்தண்டுத்தத்தி நெல் மடிச்சுக்கட்டி போன்ற பீடைகளையும், தள்ளைத் தாக்கும் பூச்சியையும் கட்டுப்படுத்தலாம். பூச்சிப் பீடைகளை கட்டுப்படுத்தலாம்.

**மரமுந்திரிகை**

மரமுந்திரிகை மரப்பட்டையிலிருந்து வடியும் பிசின், பழத் தோலிலிருந்து பெறப்படும் எண்ணெய் என்பன பீடை கொல்லியாகப் பயன்படுத்தலாம்.

**புகையிலை**

புகையிலைக் காம்பை அவித்துப் பெறப்படும் சாயத்தைக் கொண்டு பல பீடைகளைக் கட்டுப்படுத்தலாம். புகையிலைக் காம்பை நேரடியாக நிலத்துக்கு போடுவதனால் நிலத்தில் உள்ள பீடைகள் கட்டுப்படுத்தப்படும்.

**துளசி**

துளசி இலைச்சாற்றை தெளிப்பதன் மூலம் சில பீடைகளைக் கட்டுப்படுத்தலாம்.

**மரச்சாம்பல்**

சுத்தமான மரச்சாம்பலைக் கரைத்து தெளிப்பதன் மூலம் சில பீடைகளைக் கட்டுப்படுத்தலாம்.

இவ்வாறு இயற்கையான சாற்றினைப் பயன்படுத்தி இயற்கையான முறையில் பீடைகளை கட்டுப்படுத்தினால் செலவை மீதப்படுத்துவதோடு சூழல் மாசடைவதையும் தடைசெய்யலாம்.

— திருமதி ஜெயந்தி சிதம்பரநாதன்

# மாவீரர் வாரத்தை சிறப்பாக கொண்டாட முன் ஏற்பாடு

(உடுவில்)

தமிழீழம் எங்கும் மாவீரர் வாரம் சிறப்பான முறையில் கொண்டாடுவதற்கான முன் ஏற்பாடுகளை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மேற்கொண்டுவருகின்றது.

நவம்பர் மாதம் 21ம் திகதி முதல் 27ம் திகதி வரையான காலத்தில் கலை, விளையாட்டு, சமய ரீதியான கொண்டாட்டங்கள் ஸ்தாபன ரீதியாகவும் பாடசாலை ரீதியாகவும் நடத்தப்படவுள்ளன.

மாவீரர் தினக் கொண்டாட்டங்களை சிறப்பாக நடத்துவதற்கு உடுவில் தொகுதியைச் சேர்ந்த பாடசாலை ஆசிரியர்கள் தமது ஒருநாள் சம்பளத்தை வழங்குவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர்.

## வீட்டுத்தோட்ட போட்டி

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதிய உதவியுடன் யாழ். மாநகர சபைப் பிரதேசத்தில் வீட்டுத்தோட்டப் போட்டி நடாத்தப்படவுள்ளது.

யாழ். மாநகர சபைப் பிரதேசத்தில் வசிக்கும் யாவரும் இப்போட்டியில் பங்குபற்றலாம். பங்குபற்றும் தகுதியுடையவர்களுக்கு சில விதைகள் இலவசமாக வழங்கப்படவிருக்கின்றன.

போட்டிக்கான நிபந்தனைகளையும், ஏனைய விபரங்களையும் யாழ். மாநகராட்சிமன்ற 'யுனிசெப்' பகுதியுடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம்.

## இலங்கையர் மீது ஜேர்மனியில் தாக்குதல்

(பொன்)

மே ஜெர்மனியில் கடந்த இரவு இலங்கையர் ஒருவர் மீது அந்நாட்டு கும்பல் ஒன்று கடுமையாக தாக்கி அவரை காயப்படுத்தியுள்ளது.

அண்மைக்காலமாக இங்கு ஆசியநாட்டு அகதிகள் மீது குறிப்பாக இலங்கைத் தமிழர் மீது இக்கும்பல்கள் பல தாக்குதல்களை மேற்கொண்டுள்ளன.

மேலும் அகதிகள் முகாம்கள் மீது கல் குண்டுத்தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளதும் தெரிந்ததே.

## கிரிக்கெட் மே. இந்தியா வெற்றி

(ஷார்ஜா)

மூன்று நாடுகள் பங்குபற்றும் 'ஷார்ஜா கிண்ண' சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டியின் முதல் நாள் போட்டியில் மே இந்திய அணி 1 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றுள்ளது.

பாகிஸ்தான் அணிக்கும் மேற்கிந்திய அணிக்குமிடையில் நேற்று இப்போட்டி நடைபெற்றது. முதலில் ஆடிய பாகிஸ்தான் அணி சகல விக்கெட்டுகளையும் 49.1 ஓவரில் இழந்து 215 ஓட்டங்களைப் பெற்றது. மேற்கிந்திய அணி 47.4 ஓவரில் 9 விக்கெட் இழப்பிற்கு 219 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

## விவசாய உற்பத்தி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட ஆய்வு நிறுவனப் பிரிவின் முயற்சியினால் கால்நடைகள் பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் மிகவும் நன்மை அடைந்துள்ளனர்.

விவசாய உற்பத்தி அதிகரித்துள்ளது. இந்நடைமுறையினால் விவசாயிகள் மத்தியில் விவசாயச் செய்கையில் நம்பிக்கைத் தென்பு ஏற்பட்டுள்ளது. இது மேலும் விவசாய உற்பத்தி அதிகரிக்க வழிகோலும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## மட்டு - ஆனையிறவில்

(11ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை ஆனையிறவு இராணுவ முகாமின் பிரதான வீதியிலுள்ள காவலரணில் இருந்து முன்னேற முற்பட்ட இராணுவம்மீது புலிகள் நடத்திய தாக்குதலில் இரு படையினர் உயிரிழந்தனர். மேலும் இருவர் மிதிவெடியில் சிக்கி கால்களை இழந்தனர்.

நேற்றுக்காலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

## தென்மராட்சியில் ஷெல் தாக்குதல்

(சாவகச்சேரி)

முகமாலை, எழுதுமட்டுவாள், கரம்பகம் சந்தி, மிருசுவில், கொடிகாமம் பகுதிகளிலும் சாவகச்சேரி நகர்ப்பகுதியிலும் கடந்த 15-ம் திகதி மாலை ஹெலிகொப்டர் தொடர்ச்சியாக தாக்குதல் நடத்தியது.

## காரைநகர், தெல்லிப்பளை அகதிகள் பற்றிய விபரம் சேகரிப்பு

(சித்தன்கேணி)

காரைநகர், தெல்லிப்பளை ஆகிய இடங்களில் இருந்தும் வெளிமாவட்டங்களில் இருந்தும் இடம் பெயர்ந்து வந்து சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தஞ்சமடைந்துள்ள மக்களின் குறைகளை யோருட் நிறுவன இலங்கை வதிவிட பிரதிநிதி திரு போல் கெஸ்கில்டன் உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கத்திடம் கேட்டறிந்து கொண்டார்.

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு நேரடியாக விஜயத்தை மேற்கொண்ட யோருட் நிறுவன பிரதிநிதி குழுவில் யோருட் இலங்கை வதிவிட பிரதிநிதி திரு. போல் கெஸ்கில்டன், திட்டப்பணிப்பாளர் திரு.எம். எப். மக்கார் வடபகுதி திட்ட இணைப்பாளர் திரு. எஸ். சற்குணராசா சிரேஷ்ட திட்ட இணைப்பாளர் திரு. லோகேஸ்வரலிங்கம் ஆகியோர் அடங்கியிருந்தனர்.

உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கத்திடம் தொடர்ந்து உரையாடிய யோருட் நிறுவன பிரதிநிதிகளிடம் மீனவர் எதிர்நோக்கும் பிரச்சினைகள், இடம்பெயர்ந்தோர் நலன்கள், முகாம்களில் தங்கியிருப்போர் ஆகியோர் தொடர்பான விடயங்களை உதவி அரசாங்க அதிபர் விபரமாக எடுத்துக் கூறினார்.

(137)

## மரக்கறி வித்துக்கள்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்ட ஆய்வு நிறுவனப் பிரிவின் முயற்சியால் மரக்கறி விதைகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இவற்றுள் புடோல், பாவல், குரங்குவால் பயிற்றை, புடிட்டா, கத்தரி, வெண்டி போன்ற வித்துக்கள் அடங்கும். இவ்வித்துக்களைப் பெறவிரும்புவோர் கிளிநொச்சி மாவட்ட தமிழீழ ஆய்வு நிறுவனத்தில் விற்பனையாகும் வித்துக்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

## புங்குடுதீவு அகதிகளுக்கு தற்காலிகமாக உணவு வழங்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு இடம்பெயர்ந்து ஏற்கனவே அமைக்கப்பட்ட அகதி முகாம்களில் தங்கியிருப்போருக்கு உணவு வசதிகளை சிறுவர் பாதுகாப்பு நிதியம் பொறுப்பேற்று வழங்குகிறது.

இதன்பின்பு இவ்வகதிமுகாம்களுக்கு யாழ். செயலகம் பொறுப்பேற்று தற்காலிகமாக உணவு வசதிகளை செய்து கொடுப்பார்கள்.

நிரந்தரமாக அகதிமுகாம்கள் அமைப்பதை புனர்வாழ்வு அமைச்சு கடந்த ஆகஸ்ட் 1ம் திகதி தொடக்கம் நிறுத்தியுள்ளது யாழ். செயலகம் இது பற்றிமேலிடத்துடன் தொடர்பு கொண்டுள்ளதாக யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

(152)

## நடன இசை ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது

(மானிப்பாய்)

மட்டக்களப்புசுவாமி விபுலானந்தர் இசை, நடனக் கல்லூரியில் நடன ஆசிரியர் (பரதநாட்டியம்) கர்நாடக இசை ஆசிரியர் (வாய்ப்பாட்டு) இந்து திராவிடப் பண்பாட்டு ஆசிரியர் ஆகிய பதவிகளுக்கு இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தினால் இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் நவம்பர் 15ந் திகதிக்கு முன் பணிப்பாளர் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் ரக்ஷன மந்திரய 9-வது மாடி 21 வக்சேஷால் வீதி. கொழும்பு 2, என்னும் முகவரிக்கு அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இது சம்பந்தமான முழு விபரங்களும் செப்ரம்பர் மாதம் 27ந் திகதி வெளிவந்த வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## குளங்களை ஆழமாக்க உதவி

(யாழ்ப்பாணம்)

'யோருட்' நிறுவனம் யாழ். மாவட்டத்தில் பல குளங்களை ஆழமாக்குவதற்கு உணவு சம்பந்தமான உதவிகளை வழங்குவதை பரிசீலிப்பதாக யாழ் அரசாங்க அதிபருக்கு உறுதியளித்துள்ளதாகத் தெரியவருகிறது.

இந்நிறுவனம் இதற்கு முன்பு ஐந்து குளங்களை ஆழமாக்குவதற்கு உதவிகள் வழங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

(152)

## பெரிய புராணப் படன பூர்த்திவிழா

(யாழ்ப்பாணம்)

வண்ணை சிவன்கோவிலில் நான்குமாத காலமாக நடைபெற்றுவந்த பெரியபுராணப் படனப்பூர்த்தி விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 8-30 மணிமுதல் நடைபெறவுள்ளது.

விசேட பூசையைத் தொடர்ந்து பெரியபுராண படனம் நடைபெற்று பூர்த்தியாகும். பண்டிதர் திரு. தி பொன்னம்பலவாணர் பாராட்டுரையும் ஆசிரியர் க. சிவராமலிங்கம் சிறப்புரையும் நிகழ்த்துவார்கள். பெரிய புராண நூல், யானை வாகனத்தில் வெளி வீதிவலமாக எடுத்துவரப் படும்.

## குடியேறிய மக்கள் மீண்டும் இடம்பெயர்வு

(யாழ்ப்பாணம்)

முல்லை - மணலாறு மாவட்டத்திலுள்ள செம்மலை, நாயாறு, அலம்பில், கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், இளாவத்தை ஆகிய இடங்களிலுள்ள குடிமனைகளை நோக்கி பொம்மர், அவ்ரோ, விமானங்கள் கடந்த மூன்று நாட்களாக குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்தியுள்ளன.

மீண்டும் குடியேறிய தமிழ் மக்கள் அங்கிருந்து இடம் பெயர்ந்து வருவதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

(56)

## யாழ். மாவட்டத்தில் இம்மாத இறுதியில் மரம் நாட்டு இயக்கம்

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்டத்தில் இம்மாத இறுதியில் பரந்த அளவிலான மரம் நடுகை இயக்கம் ஒன்றை ஆரம்பிக்க யாழ். பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சு. டிவகலாலா சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்களும், பிரதேச பிராந்திய சனசமூக நிலையங்கள் சமாசங்கள், மாவட்ட ச. ச. நி. சம்மேளனம் ஆகியவைகள் ஊடாகச் சகல வீடுகள் ஆலயங்கள், பாடசாலைகள், மயானங்கள், பொதுநிறுவனங்கள், வீதிகள் தோறும் இம்மரம்நடுகைபணி ஆரம்பித்து மாவீரர்தினம் வரை தொடர்ந்து நடைபெற உள்ளது.

சகல இடங்களிலும், வீதி ஓரங்களிலும் மிகப்பாதுகாப்பான முறையில் இம்மரம் நடுகை இயக்கத்தை யாழ். பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆரம்பித்து வைக்க சகல ஏற்பாடுகளையும் செய்து வருகின்றார்.

## மனித உரிமை மீறும் நாடுகளுக்கு

# கனடாவும் பிரிட்டனும் உதவி வழங்க பின்னடிப்பு

(ஹராரே)

மனித உரிமைகளை மீறும் நாடுகளுக்கு உதவிகள் வழங்க பிரிட்டனும், கனடாவும் பின்னடிப்புச் செய்யப்போவதாக அறிவித்துள்ளன.

ஹராரேயில் நடைபெறும் காமன்வெல்த் உச்சி மாநாட்டில் இருநாடுகளும் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையிலே இதனைத் தெரிவித்துள்ளன.

நாடுகளுக்கு உதவி வழங்கும்போது அந்தந்த நாடுகளில் இடம்பெறும் மனித உரிமை மீறல் சம்பவங்களைக் கருத்தில் கொண்டே உதவிகளை வழங்கப்போவதாக பிரிட்டனும், கனடாவும் கூறியுள்ளன.

மேலும் மூன்றும் உலக நாடுகளில் மனித உரிமை மீறல் குறித்துத் தீவிர கவனம் செலுத்தப்படும் எனவும் இந்த நாடுகள் கூறியுள்ளன.

இலங்கையில் மனித உரிமை மோசமாக மீறப்பட்டு வருவது குறித்து இம்மாநாட்டில் ஆராயப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (க)

## அகதிகளிருக்கும் பாடசாலை வகுப்புகள் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி, தீவுப்பகுதிகளிலிருந்து வெளியேறிய மக்கள் தற்போது தங்கியுள்ள பாடசாலைகளின் வகுப்புகள் அனைத்தும் தற்காலிகமாக மூடப்பட்டு அருகாமையிலுள்ள பாடசாலைகளில் வகுப்புக்களை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளது.

அகதிகள் தற்போது யாழ்ப்பாணம் சென். மேரிஸ் கத்தோலிக்க பாடசாலை, புத்தூர் சோமஸ்கந்தா, புதுக்கலட்டி ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயம், ஆவரங்கால் நடராசா வித்தியாலயம், ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம், நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, திருநெல்வேலி கத்தோலிக்க பாடசாலை உட்பட தென்மராட்சி பகுதிகளிலுள்ள சில பாடசாலைகளிலும் அகதிகள் தற்போது தங்கியுள்ளார்கள். (வி)

# இந்தியாவில் குண்டு வெடிப்பு 50 இந்துக்கள் பலி

[புதுடில்லி]

உத்தரப்பிரதேசத்தில் ருத்திரபூர் நகரத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இரண்டு குண்டு வெடிப்புச் சம்பவங்களில் 50 பேர் பலியாகியும் 100க்கு மேற்பட்டோர் காயமடைந்துமுள்ளனர்.

இந்துமத விழாவொன்றில் சுமார் மூவாயிரம் பேர் திரளாகக் குழுமியிருந்த மைதானத்திலும் அடுத்த 10 நிமிடங்களில் வைத்தியசாலை ஒன்றுக்கு அருகே இன்னொரு குண்டும் வெடித்தபோதே இவர்கள் கொல்லப்பட்டனர்.

இவ்விரு குண்டு வெடிப்புச் சம்பவங்களும் சீக்கியத் தீவிரவாதிகளின் செயலாகவிருக்கலாமெனச் சந்தேகிக்கப்படுகிறது.

## மணலாறு பகுதியில் இடைவிடாது தாக்குதல்

(மணலாறு)

மணலாறு மாவட்டத்தில் காலை 6 மணிதொடக்கம் விமானங்களிலிருந்தும் பீரங்கிப் படகுகளிலிருந்து குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

நேற்று மாலைவரை தொடர்ந்து நடத்தப்பட்ட தாக்குதல்களினால் ஏற்பட்ட சேத விபரங்கள்பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை. [56]

## வள்ளங்கள் முற்றாகச் சேதம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கொக்குத்தொடுவாய் பகுதியிலுள்ள கடற்றொழிலாளர்களுக்குச் சொந்தமான மீன்பிடி வள்ளங்கள் யாவும் ஸ்ரீலங்கா இராணுவ, கடற்படை, வான்படை ஆகியவற்றின் தாக்குதல்கள் காரணமாக முற்றாகச் சேதமடைந்துள்ளன. (153)

### வடமராச்சிப்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யுள்ளனர்.

மந்திகை வைத்தியசாலையிலிருந்து நோயாளர்கள் பலர் வெளியேறியதுடன் ஏனைய நோயாளர்கள் நேற்று யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். வல்லை இந்திராணி வைத்தியசாலை மூடப்பட்டுள்ளது.

நேற்றுமாலை 3.45 மணியளவில் அவ்ரோ, பொம்மர் விமானங்கள் வடமராட்சிப் பகுதியை சுற்றி வட்டமிட்டதுடன் இரு பொம்மர் விமானங்களிலிருந்து வல்வை உதயசூரியன் கடற்கரைப்பகுதியிலும், வல்வை சிவகுருவித்தியாசாலை பின்பகுதியிலும், ஊறிக்காடு, மயிலியதனை, பருத்தித்துறை, தொண்டமனாறு பகுதிகளிலும் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

வடமராட்சி பகுதியில் தொடர்ந்து பதற்றம் நிலவி வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை நான்கு பீரங்கிப் படகுகள் பருத்தித்துறை முனைப்பகுதியில் எந்நேரமும் தாக்குதலுக்கு தயாரான நிலையில் தரித்து நிற்பதாக தெரிய வருகிறது. [56-51]

## விசேட பொதுக்கூட்டம்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்ட சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின் விசேட பொதுக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ் இந்துமகளிர் ஆரம்ப பாடசாலையில் நடைபெற இருக்கின்றது.

சமாச அங்கத்துவ சங்கங்களின் பிரதிநிதிகளையும் தவறாது சமூகம் தரும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

### மாதகல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நீந்திக் கரைசேர்ந்தனர்.

இதற்கு முன்னர் இக்கப்பலிலிருந்து கரையோரப் பகுதியை நோக்கி பீரங்கி தாக்குதல் மேற்கொண்டபோது வயலில் உழுதுகொண்டிருந்த விவசாயி ஒருவர் படுகாயமடைந்தார். இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

இது இவ்வாறு இருக்க, பண்டத்தரிப்பு, சித்தன்கேணி, சங்கானை ஆகிய பகுதிகளில் ஹெலிகொப்டர்ஒன்று தாழப் பறந்து கண்காணிப்பில் ஈடுபட்டது. பொன்னாலை, மூளாய் பகுதிகளில் இந்த ஹெலியிலிருந்து துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. (72)

### தபாலகம் இயங்கும்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு இடம் பெயர்ந்துள்ள மக்களின் நன்மைகருதி தற்காலிகமாக புங்குடுதீவு தபாலகம் யாழ். பிரதம தபாலகத்தில் இன்றுமுதல் இயங்கவுள்ளது.

### யாழ். மாவட்டத்தில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாக அறிவிக்கப்படுகிறது.

சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் தலைமைச் செயலகம் நேற்றுமாலை உத்தியோக பூர்வமாக இதனை அறிவித்தது.

### நிவாரணம்

1-ம் பக்கத் தொடர்ச்சி]

செஞ்சிலுவைச் சங்கத்தினூடாகவும், சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினூடாகவும் இந்த அவசர வேண்டுகோளை அரச அதிபர் நேற்று நண்பகல் விடுத்துள்ளார். (வி)

### லலித், காமினி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செயற்குழு தடை விதித்துள்ளது.

தமது தலைமையுத்தரவை மீறி அதிருப்தியாளர்களின் கூட்டங்களில் கலந்து கொள்ளும் ஐ. தே. கட்சி உறுப்பினர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் செயற்குழு அறிவித்துள்ளது.

லலித், காமினி நடாத்தும் கூட்டங்களில் பல்லாயிரக் கணக்கான மக்கள் கூடுவதாகவும் ஐ. தே. க. உறுப்பினர்களும் இக்கூட்டங்களுக்குச் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [க]

### அமைச்சர் ஜோன்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

படை முகாம்களுக்கும் விஜயம் செய்தார்.

குடாநாட்டின் பாதுகாப்பு நிலைமை குறித்து அமைச்சருக்கு யாழ். மாவட்ட தளபதி விஜயவிமலரத்ன விளக்கிக் கூறினார். இதன்பின் தொண்டர் ஸ்தாபன பிரதிநிதிகளையும் அமைச்சர் சந்தித்துப் பேசினார்.

உடனடியாக நேற்று நண்பகல் கொழும்பு திரும்பிய அமைச்சர் யாழ். ஜனாதிபதிக்கு குடாநாட்டு பாதுகாப்பு நிலைமை குறித்து விளக்கிக் கூறினார். [153]

## டக்ளசும் வந்தார்

(கொழும்பு)

வடபகுதிக்கு விஜயம்செய்த பதில் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு. ஜோன் அமரதுங்காவுடன் ஈ. பி. டி. பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தாவும் வந்திருந்தாரென அரசு அறிவித்தது. இவர் வடபகுதி இராணுவ முகாம்களுக்கும் சென்றிருந்தாராம்.

### மணலாறு மோதல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் வீரமரணமடைந்துள்ளனர்.

இவர்களின் விபரம் பின்வருமாறு:

மேஜர் டிசான் [கந்தப்போடி இலங்கநாதன், ஏறாவூர்], 2-ம் லெப். கோபி [கனகரட்ணம் சிவகுமார், மானிப்பாய் மேற்கு], 2-ம் லெப். காந்தி [செல்லத்தம்பி ராஜன், வாழைச்சேனை], லெப் கோவலன் [சின்னத்தம்பி மனோகரன், மன்னம்பிட்டி - மட்டக்களப்பு], இறிக்கி [கிவேல் சிவகுமார், புல்லுமலை, மட்டக்களப்பு], சந்துரு [கணபதிப்பிள்ளை குலேந்திரன் தம்பிலுவில் - அம்பாறை], லெப் வசந்தன் [நடராசா ரவீந்திரன், மன்னார் வீதி -வவுனியா], 2-ம் லெப். நிசாந்தன் [நாகநாதன் புலேந்திரன், பாண்டியன்குளம் - வவுனிக்குளம்], 2-ம் லெப். சரஸ்திரி [அந்தோனி சந்திரதாஸ், பெரிய உப்போடை - மட்டக்களப்பு]. லெப். நீலன் [மயில்வாகனம் சேதுலிங்கம், புதுவளவு - வல்வெட்டித்துறை]. மதின் [தியாகராசா தங்கராசா, களுதாவளை -களுவாஞ்சிக்குடி], காசிம் [அப்புத்துரை பதமநாதன், பண்டத்தரிப்பு]

இதேநேரம் ஆனையிறவுப் பகுதியில் கடந்த 4-ம் திகதி இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடிமோதலில் படுகாயமடைந்திருந்த லோகா [கருப்பையா யசோதாதேவி-மூதூர்] நேற்று வீரமரணமடைந்தார்.

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர். (வி)

### தொண்டா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பாக முன்வைத்திருக்கும் யோசனையை இலங்கை தமிழ் அரசியல் கட்சிகள் வரவேற்றுள்ளன.

பேச்சுவார்த்தைக்கு இது நல்ல தருணமாக அமைந்திருப்பதாகவும் அக்கட்சித் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

வடக்கு-கிழக்கு மாகாணங்கள் நிரந்தரமாக ஒன்றாக இணைய வேண்டும், நிதி, பாதுகாப்பு, குடியேற்றம் இவை மாநில அரசிடம் இருக்க வேண்டும். கூடிய அதிகாரங்கள் பகிர்ந்து வழங்கப்பட வேண்டும். தமிழர் மாநிலத்தில் முஸ்லிம்களின் உரிமையும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதே அமைச்சர் தொண்டமான் முன்வைத்துள்ள யோசனைகள் சிலவாகும்.

### முல்லைத்தீவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தன.

ஏ. கே. எல். எம். ஜி. ரக துப்பாக்கிகள்-3 இதற்குரிய ரவைக் கூடுகள் - 3, ரி-56 இரண்டு ரக துப்பாக்கிகள்-8 அதற்குரிய ரவைக் கூடுகள்-7, ரி-56 ஒன்று ரக துப்பாக்கி - 1, ரி-56 ரக துப்பாக்கி-1, புகைக் குண்டு-1, நடுத்தர ரவைகள் 454, நடுத்தர ரவைத்தொடர்கள்-402, நெட்டோ ரவைத் தொடர்கள்-234, ஆர். பி. ஜி. ஷெல் - 1. புறப்பிளர் - 1, தொலைத்தொடர்புச்சாதனம்-1 ஆகிய இராணுவத்தளபாடங்கள் இப்பகுதியில் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இப்பகுதியில் 21 படையினர் கொல்லப்பட்டதும் தெரிந்ததே. (153)

### கடும் எதிர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சபாநாயகமிடம் நேரில் மன்னிப்புக்கோரியபோதிலும் இலங்கை அரசு அவரை வெளியேறுமாறு உத்தரவிட்டிருப்பது இந்தியாவுக்கு பெரும் சினத்தை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை அரசின் இந்த வெளியேற்ற நடவடிக்கைக்கு சர்வதேச பத்திரிகையாளர் சங்கம் அதிர்ச்சி தெரிவித்துள்ளதுடன் கண்டனமும் தெரிவித்துள்ளது. [சி]

### இந்திய வானொலி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குமாச் செய்துவிட்டதாக இவர் அனுப்பிய செய்தியை இந்திய வானொலியும், தூரதர்ஷனும் வெளியிட்டன.

இதையடுத்து இந்தச் செய்தியை சபாநாயகர் மறுத்ததுடன் இதற்காக அரசு திரு. கருப்பசாமியைக் கண்டித்துமிருந்தது.

இந்தச் செய்தி எவ்வாறு கிடைத்தது நேற்றுக்காலை இலங்கை அதிகாரிகளால் கருப்பசாமி தனியாக அழைத்துச் செல்லப்பட்டுக் கடும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின், இவரை வெளியேறுமாறு அரசு உத்தரவிட்டுள்ளது. (சி)

## மரண அறிவித்தல்

அருட்திரு.

பொனிபஸ் கொன்சால்வெஸ்

அ. ம. தி.

(Fr. Boniface Gonzalvez, O. M. I.)

அமலமரி தியாகிகள் சபையின் உறுப்பினரான ஸ்பானியா நாட்டைச் சேர்ந்த கடந்த 43 வருடங்களாக யாழ் - மன்னார் மாவட்டங்களில் இறைபணி புரிந்த அருட்திரு. பொனிபஸ் கொன்சால்வெஸ் அ. ம. தி அடிகளார் மட்றிட் நகரில் 10-10-1991இல் இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் ஆன்ம சாந்திக்காக செபித்து, அவரின் சிறந்த பணிக்காகவும், புனித வாழ்வுக்காகவும் இறைவனுக்கு நன்றி கூற யாழ். ஆயர் தலைமையில் கூட்டுத் திருப்பலி, யாழ். மரியாள் பேராலயத்தில் 23-10-91 புதன்கிழமை மாலை 5-00 மணிக்கு நடைபெற இருக்கின்றது: அனைவரையும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்;

அருட்திரு. J. P. E, செல்வராசா
செயலர்

ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்,
17-10-91.

[சி-5502]

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி 65-ம் இலக்கத்திலுள்ள அவர்களதுஅச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஒக்டோபர் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Postoffice under Licence Number B/10336/81.